Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (14-9-65) இதழ் 214

விசுவாவசு ஆவணி 29 ஜ: அவ் பிறை 17 செவ்வாய்க்கிழமை

## யுத்த விளிம்பில் இந்திய விமானி சாதனை!

புதுடில்லி, செப்.13

இந்திய — பாகிஸ்தான் சண்டையில் இந்திய விமானப்படை வீரர்கள் நிகழ்த்திவரும் அற்புத சாதனைகள் குறித்து இப்பொழுது செய்திகள் வரத் தொடங்கியுள்ளன.

கோரயுத்தம்நடைபெற்றுவரும் சியால்கோட் பகுதியில் இந்திய விமானப்படை விமானமொன்று பறந்து கொண்டிருந்த பொழுது, பாகிஸ்தான் படைகள் அந்த விமானத்துக்குக் குறி வைத்துச் சுட்டனர். அந்தவிமானத்திலிருந்த விமானியான குருபத்சிங் பலத்த காயமடைந்தார். அவரின் உடலில்இருந்து இரத்தம் பீறிட்டுஓடிக்கொண்டிருந்தது. உடல் தளர்ந்தது. ஆனல் வீரத்துடன் அந்த விமானி தனது விமானத்தைப் பத்திரமாகச் செலுத்திக்கொண்டு இந்தியவிமானத் தளமொன்றுக்கு வந்து சேர்ந்துவிட்டார். ஆனல் ... ... விமானத்தின் முன்புறக்கதவை அவர் திறந்தபொழுது அவரின் உயிர் பிரிந்துவிட்டது.

# பல முனைகளிலும் இந்தியா முன்னேற்றம்

## நிம்மோ அறிக்கை இந்தியாவுக்கு சாதகமானது?

புதுடில்லி, செப்.13

அண்மையில் இந்திய-பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் சம்பந்தமாக காஷ்மீருக்கான ஐ.நா. தலைமைப் பார்வையாளர் ஜெனரல் நிம்மோ, ஐ.நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டுக்கு சமர்ப்பித்த அறிக்கையின் விபரங்கள் இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை இன்று இந்திய லோகசபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

போர்நிறுத்தக்கோட்டை ஊடுருவல் காரர்கள் முதலில் எவ்விதமாகக் கடந்தார்கள் என்பது பற்றியும் பின்னர் பாகிஸ்தான் துருப்புக்கள் யுத்த நிறுத்தக் கோட்டை மீறிய நிகழ்ச்சிகள் பற்றியும் இந்த அறிக்கையில் விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சண்டைகளுக்கு ஊடுருவல் காரர்களின் தாக்குதல் நடவடிக்கைகளே முழுக்காரணம் என்றும் ஜெனரல் நிம்மோ தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கை இந்திய நிலைக்கு மிகவும் சாதகமாக அமைந்திருக்கிறதென பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

## வியாபாரிகளுக்கு மந்திரி எச்சரிக்கை

### "இந்திய - பாக். சண்டையை பயன்படுத்தி விலைகளை அதிகரிக்கக்கூடாது"

பம்பலப்பிட்டி, திங்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நடைபெறும் சண்டையைப் பயன்படுத்திக்கொண்டு சிலவியாபாரிகள் பொருள்களின்விலைகளை அதிகரித்துள்ளதாக உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் வர்த்தக மந்திரிக்கும் புகார்செய்துள்ளார்கள்.

கொழும்புப் பகுதியிலும் பிரதானமாக மாகாணங்களிலும் சில வியாபாரிகள் வேண்டுமென்றே பொருட்களுக்கு தட்டுப்பாட்டை உண்டாக்கியுள்ளார்கள்எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி கறுப்புச் சந்தையில் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் மீதும்பொருள்களைக் கட்டுப்பாட்டு விலைகளுக்கு மேலதிகமாக விற்பனை செய்யும் வியாபாரிகள்மீதும் வர்த்தக மந்திரி கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காரியாதிகாரிகளின் பிரிவிலுள்ள விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளை உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் மந்திரி உத்தரவிட்டுள்ளார். அதிக விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரிகளின் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீண்டும் விற்பனை செய்ய கொடுக்கப்படவேண்டும் என்று மேலும் மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணம் வரும் கைத்தொழில் மந்திரி

சுழிபுரம், திங்கள்

இம்மாதம் 25-ம் திகதி கல்லுண்டாய் உப்பளத்தை பார்வையிடுவதற்காக கைத்தொழில் கடல்தொழில் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தனயாழ்ப்பாணம் வரவிருக்கிருர். மந்திரிக்கு மாபெரும் விசேட வரவேற்பு அளிப்பதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்துக்கு முதல் முறையாக விஜயம் செய்யும் பிலிப்குணவர்த்தன பல இடங்களுக்கு உத்தியோகபூர்வமாக தனதுவிஜயத்தை மேற்கொள்வார். வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர். திரு. அ. அமிர்தலிங்கத்தின் அழைப்பின் பெயரிலேயே திரு. பிலிப் குணவர்த்தன இங்கு விஜயம் செய்கிருர்.

## தர்மபாலவாரம்

பம்பலப்பிட்டி, திங்கள்

அனகாரிக தர்மபாலாவின் நூற்ருண்டு இறுதிவாரம் இந்தக் கிழமை எல்லா இடங்களிலும் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கொழும்பில் பிரதான விழாக்கள் இம்மாதம் 8-ந் திகதி நடைபெறும். இக்கூட்டத்தில் பிரதமர் திரு. டட்லிசேனநாயக்காவும் பல பௌத்தமத குருமார்களும் பேசுவார்கள்.

## காஷ்மீர் அரங்கில் பாக். தாக்குதல்: சியால்கோட்: பாரகபடை தீவிரம்

### டிட்வாலில் 2 பாக். நிலைகளை இந்தியா பிடித்தது

புதுடில்லி, செப். 13

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்றுவரும் சண்டைகளில் இந்தியப் படைகள் முன்னேறிக் கொண்டு செல்கின்றன என்று இன்று மாலை வரை கிடைத்த செய்திகள் கூறுகின்றன. இந்தியப் படைகள் வெற்றிகரமாக பல புதிய பாகிஸ்தான் நிலைகளைக் கைப்பற்றியுள்ளன என்றும் பாகிஸ்தான் படைகளுக்கு அதிகமான அளவில் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன என்றும் செய்திகள் கூறுகின்றன.

**ஜம்முவில்**

ஜம்முவில் இந்தியப் படைகள் தீவிரமாக முன்னேறிக் கொண்டுசெல்கின்றன. சாம் பகுதியிலும், ஜௌரியா பகுதியிலும் நேற்று முழுவதும் கடுமையான சண்டை நடைபெற்றது. இந்தச் சண்டையின்போது, மூன்று பாகிஸ்தான் டாங்கிகள் அழிக்கப்பட்டன. பாகிஸ்தானின்படைகளுக்கு கணிசமான அளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது. இப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் நடைபெற்ற சண்டைகளில், ஐந்து பாகிஸ்தான் ஜெர்மன் டாங்கிகள் சுட்டுவீழ்த்தப்பட்டன. ஏராளமான ஜீப்புகளும் வெடிமருந்துகளும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஜீப்புகளில் அதிகமானவை புதியனவாக இருந்தது. ஒரு ஜீப் 1500 மைல் தூரமே ஓடியிருந்தது.

**சியால்கோட்டில்**

ஜம்மு-சியால்கோட் பகுதிதான் இப்பொழுது ஒரு யுத்தகளமாகக் காட்சியளிக்கிறது. கடந்த இருபத்திநான்கு மணிநேரத்தில் நிகழ்ந்த சண்டையில், இந்தியப் படைகள் தீவிரமாக இங்கு போரிட்டு வருவதாகச்செய்திகள்கூறுகின்றன. இந்தியப் படைகள் முன்னர் இருந்த பகுதிகளிலிருந்து வெகுவாக முன்னேறி வருகின்றன.

**காஷ்மீரில்**

காஷ்மீர் அரங்கில் பாகிஸ்தான் படையினர் இன்று மாபெரும் தாக்குதல்களை ஆரம்பிக்கத்திட்டமிட்டிருந்தனர். ஆனல் இவர்களின் தாக்குதல்கள் ஆரம்பமாவதற்கு முன்னதாகவே இந்தியப் படைகள் இத்தாக்குதல்களை முறியடித்துவிட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**டிட்வாலில்**

டிட்வால் பகுதியில் இந்திய படைகள் இன்று புதிய தாக்குதல்களை ஆரம்பித்தன. பாகிஸ்தான் படைகளின் பலத்த எதிர்த்தாக்குதல்களை வீரத்துடன் சமாளித்து இரண்டு பாகிஸ்தானியநிலைகளை இந்தியா கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**முஸாபராபாத்**

, பாகிஸ்தானின் பகுதிகளிலுள்ள காஷ்மீரின் பல பகுதிகளிலும் தாக்குதல்கள் நடத்தி முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் இந்திய துருப்புகள் அஸாத் காஷ்மீர் (பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர்) தலைநகர் முஸாபராபாத் நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர் என்றும் அதற்கான பாதைகளை இந்திய படைகள் தீரத்துடன் அமைத்து வருகின்றனர் என்றும் ஏ ஜ ன் ஸி செய்திகள் கூறுகின்றன.

**லாகூர் நிலைமை**

இந்திய- பாகிஸ்தான் படைகளுக்கிடையே உச்சக் கட்டத்தில் சண்டை நடைபெற்று வரும் லாகூர் முனையில் இன்றும் உக்கிரமான போர் நடைபெற்றது. இருதரப்பிலும் அதிகமான அளவில் உயிர் சேதம் ஏற்பட்டு வருகிறது என்று ''பி. பி. ஸி.'' நிருபர் அறிவிக்கிருர். லாகூர் முனையைக் கைப்பற்றுவதில் இந்தியப் படைகள் முழுத்தீரத்துடன் போராடி வருகின்றனர் என்றும் பாகிஸ்தான் படைகளும் தனது எதிர்த்தாக்குதல்களை முழுப்பலத்துடன் நடத்தி வருசிறது என்றும் இந்த நிருபர் அறிவிக்கின்ருர்.

**மீண்டும் விமான தாக்குதல்**

கடந்த சில தினங்களாக பாகிஸ்தானின் விமானத் தாக்குதல்களுக்குள்ளாகி வரும் ஜோத்நகரில் இன்று காலையும் பாகிஸ்தான் விமானங்கள் இரு தடவைகள் குண்டுகள் வீசின. சேத விபரம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

**கட்டித் தழுவிய காட்சி**

ஹாஜிபீர் கணவாயைக் கைப்பற்றியுள்ள இந்தியத் துருப்புகள் மலைக்கணவாயின் இரு முனைகளாலும் வந்து ஒரு இடத்தில் எதிர்பாராத விதமாகச் சந்தித்த பொழுது அவர்கள் ஆனந்தம் மேலிட ஒருவரையொருவர் கட்டித் தழுவி மகிழ்ச்சி கொண்டாடினர்.

---

## நிதிமந்திரி வெளிநாடு பயணம்

பம்பலப்பிட்டி, திங்.

நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்கா இன்றுகாலை ஜமைக்காவில் நடைபெறும் காமன்வெல்த் நிதிமந்திரிகள் மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக விமான மூலம் பயணமானுர்.

மந்திரியுடன் திறைசேரி அதிகாரி திரு. எம். ஜே. சமரக்கொடி, மத்திய வங்கி கவனர், மந்திரியின் அந்தரக்கக் காரியதரிசி ஆகியோரும் சென்றுள்ளார்கள்.

---

## பன்றி விளைவிக்கும் சேதம்!

சுழிபுரம், திங்கள்

மாதகல் பகுதியில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக ஒரு காட்டுப் பன்றி தோட்டச் செய்கையாளர்களுக்குப் பெரும் சேதம் செய்து வருகின்றது. ஒவ்வொரு நாளும் ஐம்பது வாலிபர்களுக்கு மேல் பன்றியை விரட்டுவதில் ஈடுபட்டு வருகின்றனர். கிழங்கு வகைகள், மரங்கள், குரக்கன், வெங்காயம், ஆகிய தோட்டச் செய்கை பயிர்களை பன்றிநாசம் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எமக்குத் துன்பஞ் செய்கிறவன் 'உனக்குக் கோபம் இருக்கிறது' என்று தெரிவிக்கிருன். ஏதொன்ருல் மேற்படுகிறவன் 'உனக்குப் பொருமை இருக்கிறது' என்று தெரிவிக்கிருன். இப்படியே நம்மிடம் உள்ள குற்றங்களைப் பிறரே தெரிவிக்கின்ருர்கள். இவர்கள் இல்லாவிட்டால் நாம் நம்மைச் சரிப்பட்டவராக எண்ணி ஏமாந்து போவோம். நமது குற்றங்களைத் தெரிவிப்பவர்கள் நமக்குக் குருவாகவும் வைத்தியராகவும் மதிக்கத்தக்கவர்கள். —ஆன்மவிசாரம்

ஈழநாடு
EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389
யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 29 உ (14-9-65)

# இந்திய - பாக். யுத்தம் பரவுமா?

இலங்கை வழியாக பாகிஸ்தானுக்கு இராணுவ விமானங்கள் செல்வதற்கு அனுமதியளிக்க இலங்கை மறுத்துவிட்டது. இலங்கையின் நடுநிலைமைக் கொள்கைக்கும் யுத்தத்தை நிறுத்துவதற்கும் இலங்கையின் இந்த முடிவு சரியான நடவடிக்கையாகும். இலங்கை பாராட்டுக்குரியது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் மூண்டுள்ள யுத்தத்தைநிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இந்திய உபகண்டத்தில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் இரு நாடுகளுக்குமிடையில் யுத்தம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைவிட இந்த யுத்தத்தில் தனக்கு உடனடியாக உதவி புரிய வேண்டுமென்று ஐ. நா.வில் அங்கம் வகிக்கும் நாடுகள், அங்கம் வகிக்காத நாடுகளுமான தனது நட்பு நாடுகளை பாகிஸ்தான் வேண்டியுள்ளது. இக்கோரிக்கையை இந்தோனேஷியா உடனடியாக முழுமனதாக ஏற்றுக் கொண்டு உதவி புரிய முன்வந்துள்ளது. இந்நிலையில்தான் தனது இராணுவ விமானங்கள் இலங்கை வழியாகப் பாகிஸ்தானுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று இந்தோனேஷியா இலங்கையைக் கேட்டிருந்தது. இதற்கு இலங்கைப் பிரதமர் மறுத்துவிட்டார். இந்நடவடிக்கைக்காக பிரதமர் டட்லியைப் பாராட்ட வேண்டும்.

மத்திய கிழக்கு நாடுகளான ஈரான், ஈராக், துருக்கி ஆகிய நாடுகள் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவியும் இதர உதவிகளும் அளிக்க முன்வந்துள்ளன. இந்நாடுகள் யுத்தத்தைப் பெருப்பிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளை ஐ. நா.ஸ்தாபனமும் ஐ. நா. பாதுகாப்புச்சபையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் யுத்தநிறுத்தம் ஏற்படவும் சமாதானம் நிலவவும் ஐ. நா. பாதுகாப்புச்சபையும் ஐ. நா. தலைமைக் காரியதரிசியும் பெருமுயற்சி செய்து கொண்டிருக்கும் சமயத்தில் ஐ. நா. அங்கத்துவ நாடுகள் சில யுத்தத்தைப் பெருப்பிக்கமுயற்சி செய்வது நிச்சயம் நல்லதல்ல. ஐ. நா. தலைமைக் காரியதரிசியின் முயற்சியை ஆதரிக்கும் அமெரிககா, சோவியத் யூனியன், பிரிட்டன் ஆகிய வல்லரசுகள், மத்தியகிழக்கு நாடுகள் சில இந்திய-பாகிஸ்தான் தகராறில் தலையிட்டு ஆயுத உதவியும் இதர உதவிகளும் அளிப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பது நியாயமல்ல. மத்திய கிழக்கு நாடுகளான ஈரான், ஈராக், துருக்கி ஆகியவைகள்மீது தங்கள் செல்வாக்கைப் பிரயோகித்து இந்த யுத்தத்தில் அவைகள் தலையிடாமல் தடுக்க வேணடியதுபிரிட்டன், அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் கடமை.

'சென்டோ' எனப்படும் இராணுவக் கூட்டு அமைப்பில் பிரிட்டன், துருக்கி, ஈரான் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்தக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு மாருக அமைக்கப்பட்டதல்ல. கம்யூனிஸ ஆதிக்கம் பரவாமல் தடுப்பதே இந்தக் கூட்டமைப்பின் நோக்கம் எனக் கூச்சலிட்டுக் கூறப்பட்டது. சென்டோவில் அங்கம் வகிக்கும் நாடு என்னும் முறையில் பாகிஸ்தான் உதவி கோரிய பொழுது அதற்கு இணங்க முடியாதென பிரிட்டன் மறுத்து விட்டது பிரிட்டன் மறுத்து விட்டபோதிலும் அதில் அங்கம் வகிக்கும் துருக்கியும் ஈரானும் இராணுவ உதவி அளிப்பதை பிரிட்டன் பாாத்துக்கொண்டிருப்பது அதற்கு பிரிட்டனும் மறைமுகமாக ஆதரவளிப்பதாகவே கொள்ள முடியும். 'சென்டோ' இஸ்லாம் பெயரில் பாகிஸ்தானுக்கு உதவி அளிப்பது கூட தவருனதாகவே கருத முடியும்.

இந்தோனேஷிய இராணுவ விமானங்கள் இலங்கைவழியாகச் செல்வதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்க மறுத்து யுத்த நிறுத்தத்துக்கு உதவி செய்துள்ளதைப் பின்பற்றி காமன்வெல்த் நாடுகளும், நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றும் நாடுகளும் மற்றும், சமாதானத்தை விரும்பும் நாடுகளும், சோவியத்யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசுகளும் மத்திய கிழக்கு நாடுகள்சிலவற்றின் யுத்த ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளைக் கண்டித்து ''எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும்'' அவர்களின் நடவடிக்கைகளைத் தடைசெய்ய முயற்சி செய்யவேண்டும். உடனடியாகவும் விரைவாகவும் இந்த முயற்சியை மேற்கொள்ளத்தவறினுல் ஆசியாவில் தோன்றியுள்ள இந்த ஆபத்தான நிலை உலகில் பரவி கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். இலங்கை காட்டியுள்ள முன்மாதிரியை உலக சமாதானத்தை விரும்புவதாகக் கூறிக் கொள்ளும் இதர நாடுகளும் பின்பற்றுமென்றே திளர்பார்க்கிருேம்.

## 'பாரதி தந்த மருந்து'

கொஸ்லாந்தை, திங்.
''ஆங்கிலேயர் அடிமை ஆட்சியில் வாழ்ந்துகொண்டிருந்த மக்களை எப்படித் தன் கவியின் மூலம் பாரதியார் தட்டி எழுப்பினுரே அதேபோலஇன்று மலையகத்தில் அறிவுக்கண்ணைத் திறந்துவிட மலையகத்தில படித்த ஒவ்வொரு வாலிபனும் ஒவ்வொரு பாரதியாகமாற வேண்டும். அப்படி மாறினுல் தான் இன்றும் நம்மை பீடித்துள்ள அறியாமை நீங்கும்'' என்று

கொஸ்லாந்தை பாரதி கல்லூரியில் நடைபெற்ற பாரதி விழாவில் மேற்படி கலலூரி அதிபர் திரு எஸ். ஜெகநாதன் பேசும் போது குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமை வகித்த கொஸ்லாந்தை அரசினர் தமிழ் மகாவித்தியாலய பிரதம உப அதிபர் திரு மு வெற்றிவேலு பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''இன்று உலகத்தில் எல்லா நோய்களுக்கும் எல்லா டாக்டர்களாலும் உபயோகிக்கப்படும் பென்சிலின்மருந்தை விடச்சாலச் சிறந்தது பாரதியின் பாடல்கள். எக்காலத்தில் என்ன நோய்கள் வருமென்பதை முன்பே அறிந்து அதற்கு தகுந்த மருந்தை தன் கவியின் மூலம் இலவசவாக உலகுக்கு அள்ளித்தந்தவன் பாரதியே.

விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இயல், இசை, நாடகத்தில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிய கொஸ்லாந்தை மேல் அம்பட்டிதனை தோட்டத் துரை திரு இ.எம். லாசரஸ் தமிழில் பேசுகையில்; மாணவர்களிடையேயும். தோட்ட மக்களிடையேயும் மொழி, மத பேதமிருக்கக் கூடாது. இன்று மலையகத்தில் பல இடங்களில் கல்வித்தரம் குன்றியுள்ளது. இதை நிவிர்த்தி செய்ய வேண்டுமானுல் இப்பாரதி கல்லூரி போன்ற பாடசாலைகள் இன்னும் பல இடங்களில் தோன்ற வேண்டும்.

இல்விழாவில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் அநேகம் இடம் பெற்றது. மாணவர்களுடன் பெருந்தொகை சிங்கள—தமிழ் பொதுமக்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## விவேகானந்தசபை பேட்டி கண்டது

பம்பலப்பிட்டி, திங்கள்
சென்ற வாரம் விவேகானந்த சபையின் தூது கோஷ்டி ஒன்று உள்நாட்டு மந்திரி திரு. டபிள்யூ. தஹநாயகாவை சந்தித்து இந்துக்களின் பொது விடுமுறைகள் பற்றியும் அதன் விரிவான விபரங்கள் பற்றியும் ஒரு மகஜரை அவரிடம் சமர்ப்பித்தது.

தைப்பொங்கல், மகா சிவராத்திரி, சிவராத்திரிக்கு மறுநாள், சித்திரைப் பௌர்ணமி, இந்து புதுவருடப்பிறப்பு, ஆடி அமாவாசை, தீபாவளி, விஜயதசமி, திருக்கார்த்திகை ஆகிய தினங்களைப் பொது விடுமுறை நாட்களாக்கும்படி மந்திரிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் கோரப்பட்டுள்ளது.

பௌர்ணமி தினங்களை பொது விடுமுறை நாட்களாக்கும் படியும், வெள்ளிக் கிழமைகளில் இரண்டு மணித்தியாலங்கள் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இந்து வழிபாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும் [illegible] தெரிவிக்கப்பட்டது.

## 'சரஸ்வதி பூஜை கொண்டாடுக'

பம்பலப்பிட்டி, திங்கள்
கடந்த வருடம்போல இவ்வருடமும் அரசாங்க காரியாலயங்களிலும், கூட்டு ஸ்தாபனங்களிலும், வர்த்தகஸ்தாபனங்களிலும் சரஸ்வதி பூஜைவிழாவை சிறப்பாக விரிவான முறையில் கொண்டாட ஏற்பாடு செய்யுமாறு எல்லா இந்துக்களையும் சைவசமய ஸ்தாபனங்களையும் கொழும்பு இந்து வாலிபர் சங்கம் கேட்டுள்ளது.

இதற்கான அறிவித்தல்களையும்சுற்றுநிருபத்தையும் கொழும்பு இந்துவாலிபர் சங்கக் காரியதரிசி பல சங்கங்களுக்கும் அனுப்பியுள்ளார் எனத்தெரியவருகிறது

### சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு
## கூட்டங்களுக்கு ஏற்பாடுகள்

சாவகச்சேரி, திங்.
கடந்தவாரம் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீராவினுல் கூட்டப்பெற்ற சமூக ஏற்றத்தாழ்வுகள் ஒழிப்பு சம்பந்தமான ஆலோசனைக்கூட்டத்தில்தீர்மானித்தபடி ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் நடைபெற இருக்கும் கூட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தக் கூட்டங்கள் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஒழிப்புவாரமான இம்மாதம் 19-ம் திகதி முதல் 25-ம் திகதிவரை நடைபெறும்.

## பொலிசாரின் குடும்பத்துக்கு நஷ்டஈடு

பம்பலப்பிட்டி, திங்.
கடமையாற்றிக்கொண்டிருக்கும்பொழுது மரணத்துக்குள்ளாகும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் குடும்பத்துக்கு வருங்காலத்தில் சிறந்த முறையில் உதவிகள் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவிருப்பதாகத் தெரியவருகிறது.

இப்படியான சந்தர்ப்பங்களில் கணவரை இழந்த குடும்பத்திற்கு குறைந்தது 23,000 ரூபா நஷ்டஈடாகக் கொடுக்கப்படவேண்டும்என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக இது குறித்து பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாலும் பொலிஸ் பகுதியினுலும் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளம்பதவிஉயர்வு பற்றி ஆராய்வதற்காக அரசாங்கம் விரைவில் கமிட்டி ஒன்றை நியமிக்கவிருக்கின்றது.

## 'கலைமன்றங்களை பாராட்டவேண்டும்'

சாவகச்சேரி, திங்.
''கலைகளில் மிகவும் புனிதமான இசைக்கலை தெய்வீகத்தன்மை வாய்ந்தது. அப்படிப்பட்ட கலையின் பெருமையை உணர்ந்து கலைவளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றிவரும் இசைக்கலை மனறங்களைப் பாராட்ட வேண்டியதுஎமதுகடமை''.

இவ்வாறு தென்மராட்சிக் காரியாதிகாரியும், தென்மராட்சி இசைக்கலை மன்றப் போஷகருமான திரு. இ. சிதம்பரப்பிள்ளை சாவகச்சேரி சந்திரசேகரவாரிவன நாதசிவன்கோவில் முன்றலில்அமைக்கப்பெற்றசங்கீத கலாநிதி ஆலத்தூர் ஸ்ரீ சிவசுப்பிரமணியஐயர் அரங்கில் நடைபெற்ற மேற்படி இசைக்கலைமன்ற இசை [illegible] மூன்றும்நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப்பேசுகையில் கூறினுர்.

## நாட்டிலும் நகரிலும்

இலங்கையில் ஆங்கிலேயரின் ஆட்சி உச்சஸ்தானத்தை அடைந்திருந்தபோது அவர்களிடத்தில் பெரிய உத்தியோகம் வகித்த ஒரு கருவாக்காடு தமிழர் திருவாசகத்தையும், தாயுமானவரையும், சிவஞானசித்தியாரையும்கரைத்துக் குடித்ததுமட்டுமல்லாமல் அவற்றுள் செறிந்துள்ள அற்புதமான கருத்துக்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார் என்ருல் ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? அப்படிச் செய்த உயர்குடித் தமிழன் சேர் பொன்னம்பலம் அருணசலத்தின் பிறந்ததினம் இன்று.

அன்னியர் ஆட்சியில் அமிழ்ந்தி ஐரோப்பிய நாகரீகத்தைப் பெரிதாக மதித்து நமது பழைய பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் முற்றிலும் மறந்து மக்கள் வாழ்ந்த காலத்தில், 'இந்நாட்டில் வாழும் சிங்களவரும் தமிழரும் ஒன்றுமறியாத காட்டுமிராண்டிகளல்லர். போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் இங்கு வந்தபின்புதான் எமக்கு நாகரிகம் உதயமானது என்று நினைக்க வேண்டாம். உங்கள் நாகரீகம் 2000 வருடங்களுக்கு அப்பாற்பட்டது' என்று 1919-ம் ஆண்டு நடந்த சிங்கள மகாநாட்டில்அறைகூவி எமது தேசிய உணர்ச்சிகளைத் தூண்டி எழுப்பியவர் சேர் அருணுசலம்.

1915-ம் ஆண்டில் இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டு இராணுவ சட்டத்தின்கீழ், சிங்கள தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டபோது சேர் அருணுசலமும் அவருடைய சகோதரர்சேர் பொன். இராமநாதனும் துரைத்தனத்தாரோடு வாதாடி அவர்களை விடுவித்தனர்.

தேசிய போராட்டத்திலும், கல்விசீர்திருத்தத்திலும், தொழிலாளர் மேம்பாட்டு இயக்கங்களிலும் கழுத்தளவில் ஈடுபட்டிருந்த ஒருவர் சைவ சித்தாந்த நூல்களை வாசித்து அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கத் தூண்டியது என்ன என்று ஆராயும்போது அவருடைய பாட்டியிடத்தில் மறுமொழியைக் காணலாம். கடவுள்பக்தியிலும், சைவநெறியிலும் ஊறித்திளைத்திருந்த இவ்வம்மையார் (விசாலாட்சி) அக்காலத்தில் கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு கால்நடையாகவே யாத்திரை செய்வாராம். பாட்டிமார் பேரப்பிள்ளைகளுக்கு உபகதை சொல்லித் தூங்க வைப்பார்களாம். ஆனுல் இந்தப் பாட்டியார் இரவில் மாணிக்கவாசகரையும், தாயுமானவரையும் தமது பேரனுக்குப் புகட்டி வைத்திருக்கவேண்டும். இந்த ஒப்பற்ற உதவியினுல்போலும் 'அகிலாண்டகோடி யீன்ற அன்னையே! பிள்ளையும் கன்னியென மறைபேசும் ஆனந்தரூப மயிலே!' என்றதாயுமானவர் தொடரை அடிக்கடி தமது பிரசங்கங்களிலும், எழுத்துக்களிலும் கையாண்டிருக்கிருர். மதுரை மீனுட்சியம்மனைத் தரிசிக்கச் சென்றிருந்த போது அப்புண்ணிய பதியிலே சேர் அருணுசலம் உயிர்நீத்தாரென்பதும் இங்கு குறிப்பிடவேண்டியது.

திருவனந்தபுரம் திவானுயிருந்த சேர் சி. பி. ராமஸ்வாமி ஐயருக்கும், சேர் அருணுசலத்துக்குமிடையில் ஆழமான நட்பு இருந்துவந்தது. இருவரும் சைவசித்தாந்தக் கொள்கைகளையும், வேதாந்தக்கொள்கைகளையும் ஒன்று

(6-ம் பக்கம் பார்க்க)

# லாகூரில் இரண்டாம் உலக யுத்த காட்சிகள்:
# அமிர்தசரஸில் பாக். தீக்குண்டு வீச்சு

## மற்றுமொரு நாடு தலையிட்டால் 3-வது உலக யுத்தம் மூளும் என நிபுணர்கள் எச்சரிக்கை

### ஜோத்பூர், ஜம்முகாஷ்மீரில் பாக். குண்டு வீச்சு; விசாகபட்டினம் மீது பாகிஸ்தான் விமானங்கள் கண்ணோட்டம்

லண்டன், செப். 13

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்றுவரும் இக்கட்டத்தில் மற்றுமொரு நாடு இச்சண்டையில் குறுக்கிடுமானால் அல்லது மற்றைய நாடுகளின் ஆயுத, துருப்புகள் உதவிகள் ஒரு நாட்டுக்குக் கிடைக்குமானால் மூன்ருவது உலக யுத்தம் நிச்சயம் மூளும் என்று மேற்கத்திய நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே இப்பொழுது நடைபெறும் சண்டை இரண்டாவது யுத்தகாலத்தை ஒத்ததாகவிருக்கிறதென்றும் வெளிநாட்டு நிபுணர்கள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### உக்கிரமான சண்டை நீடிக்கிறது

லாகூர் பகுதியில்தான்இ-ந்திய பாகிஸ்தான் படைகளுக்கிடையே உக்கிரமானசண்டை நடைபெற்றுவருகிறது. கடந்த நான்கு தினங்களாக லாகூரின் பல பகுதிகளிலும் சியால்கோட் முனையிலும்தான் தீவிரமான யுத்தம் நிகழ்ந்து வருகிறது. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் அப்படியானதொரு சண்டை இப்பொழுது லாகூரில் நடைபெறுவதாக நிருபர்கள் அறிவித்துள்ளனர். "இந்திய பாகிஸ்தான் படைகள் இங்கு நேரடியாகச்சண்டை செய்கின்றன. இரு தேசங்களினதும் விமானங்கள் குண்டுகளைக் காரசாரமாகப் பொழிந்து தள்ளிக் கொண்டிருக்கின்றன. பீரங்கிகளும், டாங்கிகளும் விண்ணினைப் பிடிக்கும் வண்ணம் குண்டுகளை எதிரிகளின்மீது விளாசிக் கொண்டிருக்கின்றன" என்று பல பத்திரிகைகளின் யுத்த நிருபர்கள் அறிவித்துள்ளனர்.

### 212 பாக். டாங்கிகள் அழிக்கப்பட்டன

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்றுவரும் யுத்தத்தில் இதுவரை 212 பாகிஸ்தான் டாங்கிகளை இந்திய படைகள் அழித்துவிட்டன என்றும் 32 பாக். டாங்கிகளைக் கைப்பற்றியுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியப் படைகள் தீவிரமாகத் தாக்குதல்கள் நடத்தி வருகின்றன என்றும் கடந்த இரு தினங்களிலும் இந்தியப் படைகள் மிகவும் தீரத்துடன் போராடி ஏராளமான பாகிஸ்தான் டாங்கிகளை நாசமாக்கியுள்ளன என்றும் இந்தியச் செய்திகள் கூறுகின்றன. இரண்டாவது யுத்தகாலத்தில் இப்படியான குறுகிய நாளில் இவ்வளவு தொகையான டாங்கிகளை எதிர்தரப்பினர் அழிக்கவில்லை என்று பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### ஜோத்பூர், அமிர்தசரஸில் குண்டுவீச்சு

பஞ்சாப் தலைநகர் அமிர்தசரஸிலும், ஜோத்பூரிலும் பாகிஸ்தான் விமானங்கள் நேற்று குண்டுகளை வீசின. அமிர்தசரஸ் நகர்மீது பாகிஸ்தான் விமானங்கள் இரண்டு தீக்குண்டுகளை வீசின. தீயைப் பரவவிடாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. சேதவிபரம் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அறிவிக்கப்படவில்லை. இதுபற்றி இந்தியச் செய்திகள் அறிவிக்கையில் அமிர்தசரஸ் மீது நேற்று 7 பாகிஸ்தான் விமானங்கள் பறந்துவந்தன. இரண்டு தீக்குண்டுகள் வீசப்பட்டன. 'பி-57' என்ற பாகிஸ்தான் விமானம் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டது. 3 விமானங்களுக்குக் கடுமையான சேதம் விளைவிக்கப்பட்டது. மற்றைய விமானங்கள் துரத்தப்பட்டன என்று தெரிவித்துள்ளது.

### காஷ்மீரிலும் பாக். தாக்குதல்

நேற்று ஜம்மு-காஷ்மீர் மீதும் பாகிஸ்தான் விமானங்கள் தாக்குதல்கள் நடத்தின. ஆனால் சேதம் பரவலாகவில்லை என்று இந்தியச் செய்திகள் கூறுகின்றன. பாகிஸ்தான் விமானங்கள், இந்திய இராணுவநிலைகள் மீதும், இலக்குகள் மீதும் தாக்குதல்கள் நடத்திப் பெரும் சேதத்தை ஏற்படுத்திவருகின்றன என்றும், ஜம்மு-காஷ்மீரில் இந்தியத் துருப்புகளுக்கு அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதுடன் அவர்களின் முன்னேற்றமும் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

### பாகிஸ்தானிடம் மொத்தம் 400 டாங்கிகளே?

பாகிஸ்தானிடமிருக்கும் மொத்த டாங்கிகளின் எண்ணிக்கை 400 என்றும், இவற்றில் சரி பாதிக்கு மேலானவை, ஏற்கனவே அழிக்கப்பட்டுவிட்டன என்றும் இந்தியா அறிவித்துள்ளது.

### சியால் கோட்டில் உக்கிரமான சண்டை

சியால்கோட் முனையில் தற்பொழுது உக்கிரமான சண்டை நடைபெற்றுவருகிறது. பெரும் எண்ணிக்கையில் உயிர்ச்சேதமும் ஆயுத சேதமும் ஏற்பட்டுவருகின்றன என்று செய்திகள் கூறுகின்றன. இந்தியப் படைகளின்மீது தாக்குதல்கள் நடத்திய பாகிஸ்தான் விமானமொன்று சுட்டுவீழ்த்தப்பட்டதாக இந்தியா அறிவித்துள்ளது. இந்தியப் படைகள் பின்வாங்குகின்றன என்றும் ஏராளமான இந்திய டாங்கிகள் கடந்த இரு தினங்களிலும் அழிக்கப்பட்டன என்றும் பாகிஸ்தான் செய்திகள் கூறுகின்றன.

### பாக். தகவல்நிலையம் கைப்பற்றப்பட்டது

ஜம்மு-காஷ்மீரில் இப்பொழுது இந்திய-பாகிஸ்தான் துருப்புகளுக்கிடையே கடுமையான சண்டைநடைபெற்றுவருகிறது. முக்கியமான பகுதிகளை இந்தியா பிடித்திருப்பதாக இந்தியச் செய்திகள் கூறுகின்றன. இப்பகுதிகளில் இந்தியப் படைகளுக்குப் பெரும் தோல்வி ஏற்பட்டுவருகின்றன என்றும், இந்தியப் படைகள் விரட்டப்படுகின்றன என்றும் பாகிஸ்தான் வானொலி அறிவிக்கிறது. ஜம்மு-சியால்கோட் அரங்கில் பாகிஸ்தான் படைகளின் முக்கியமான தகவல்நிலையமொன்றை இந்தியப் படைகள் கைப்பற்றியுள்ளதாக இன்று அறிவிக்கப்பட்டது.

### 350 இந்தியத் துருப்புகள் சரணடைந்தனவாம்

லாகூரின் தெற்குப் பகுதிகளில் நேற்று 350 இந்தியத் துருப்புகள் பாகிஸ்தான் படைகளிடம் சரணடைந்திருப்பதாக பாகிஸ்தான் வானொலி அறிவித்துள்ளது. எந்தவிதமான சண்டையும் நடைபெறமல் இவர்கள் அனைவரும் சரணடைந்தனர் என்றும், துப்பாக்கிப்பிரயோகம் எதுவும் நிகழவில்லையென்றும் பாகிஸ்தான் மேலும் அறிவிக்கிறது. சரணடைந்த இந்தியப் படைகளில் [illegible] ஏழு உயர் அதிகாரிகள் ஆகியோரும் இருந்தனராம்.

(5-ம் பக்கம் பார்க்க)

## நாட்டைப் பாதுகாக்க மூன்று லட்சம் தமிழ் மாணவர்கள் தயார்

### மாணவரின் தீரம் குறித்து பிரதமர் சாஸ்திரி பெருமிதம்

சென்னை, செப். 13

தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று லட்சத்துக்குமதிகமான மாணவர்கள் நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க தாங்கள் தயாராக இருப்பதாகத் தெரிவித்து இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரிக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இக்கடிதம் தமிழ்நாட்டு முதன்மந்திரி திரு. எம். பக்தவத்சலம்மூலம் பிரதமர் சாஸ்திரிக்குச் சேர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்நாட்டு மாணவர்களின் உண்மையான விசுவாசத்தைப் பாராட்டிய திரு. சாஸ்திரி, உயர்ந்த நாட்டுப்பற்றுக் கொண்டுள்ள தமிழ்நாட்டு மாணவர்கள் மற்றைய மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிருர்கள் என்றும் மாணவர்களின் ஆதரவு குறித்துப் பெருமிதம்அடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

## சீனாவின் கண்டனக்குறிப்பு: இந்தியா நிராகரித்தது

புதுடில்லி, செப். 13

கம்யூனிஸ்ட் சீனா அனுப்பிய கடிதத்துக்கு இந்தியா பதிலளித்துள்ளது

"திபெத்—சிக்கிம் எல்லையில் இந்தியத் துருப்புகள் ஊருடுவல் நடத்தியதாக சீனா தெரிவித்துள்ள குற்றச்சாட்டு, வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட ஒரு கட்டுக் கதையாகும். இந்தக் கதையைக் கொண்டு வெளி உலகில் இந்தியாமீது குற்றம் சுமத்தி தாக்குதல் ஆரம்பிக்க சீனா முயற்சிக்கிறது" என்று இந்தியா தனது பதில் குறிப்பில் தெரிவித்துள்ளது

"இந்தியாவுக்கு ஆக்கிரமிக்கும் நோக்கம் கிடையாது. ஆனல் பாகிஸ்தானுடன் காஷ்மீர் விஷயமாக ஏற்பட்டிருக்கும் சிக்கலில் சீனா இப்படியாகத் தலையிடுவது வரவேற்கத் தக்கதல்ல. இந்தியாமீது தாக்குதல்களை ஆரம்பிக்க சீனா இப்படியான சாக்குப் போக்குகளைச் சொல்கிறது" என்றும் அக் குறிப்பு கூறுகிறது.

## பாகிஸ்தான் தாக்குதல் சீனாவின் தூண்டுதலே

### ஐ. நா. வின் இந்திய பிரதிநிதி பேட்டி

நியுயோர்க், செப். 13

இந்தியாவுடன் பாகிஸ்தான் ஆரம்பித்த இந்த சண்டைகளுக்கு சீனாதான் தூண்டுதல் என்று ஐ. நாவிலுள்ள இந்திய பிரதிநிதி திரு. சக்ளா தெரிவித்துள்ளார்.

டெலிவிஷனுக்கு அளித்த ஒரு பேட்டியில் அவர் இந்திய-பாகிஸ்தான் நெருக்கடி குறித்து விளக்கமாகக் கூறினர்.

"பாகிஸ்தான் சில யோசனைகளைக் கூறியிருப்பதாகத் தெரியவிருகிறது. இந்தியா எப்பொழுதும் சமாதானத்தையே விரும்புகிறது. இப்படியான யுத்தமொன்றை ஆரம்பித்து அதனை விஸ்தரிக்க விரும்பியது முழுக்க முழுக்க பாகிஸ்தானே" என்றும் திரு. சக்ளா கூறினர்.

"இந்தியாவுடன்இணைந்து ஒரு பகுதியில் சுய நிர்ணய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று பாகிஸ்தான் கோருவது நியானமான தொன்றல்ல. பாகிஸ்தான் நெருக்கடியில் சீனா தலையிடப் பார்க்கிறது. சீனாவின் தூண்டுதல் காரணமாகவே இந்தச் சண்டையை பாகிஸ்தான் ஆரம்பித்தது காஷ்மீருடன் சீனாவுக்கு தொடர்பு கிடையாது" என்றும் அவர் தெரிவிந்தார்,

## யுதாண்ட்-சாஸ்திரி பேச்சுக்கள் நீடிப்பு

புதுடில்லி, செப்.13

ஐ. நா. தலைமைக் காரியதரிசி நேற்று இந்தியப்பிரதமர் சாஸ்திரியுடன் இரண்டு மணிநேரம் பேச்சுக்கள் நடத்தினர். இந்தப் பேச்சுக்கள் மிகவும் திருப்தியான முறையில் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது.

ஐ நா.வின சமாதான் நோக்கத்தை இந்தியா என்றும் வரவேற்கிறதென்று இந்தியப்பிரதமர் சாஸ்திரி, யுதாண்டிடம் கூறியதாகவும் இந்திய—பாகிஸ்தான் சண்டையில் யுத்தநிறுத்தம் ஏற்படுமுன்னர் பாகிஸ்தானை பகிரங்கமாக ஐ.நா. "ஆக்கிரமிப்பு நாடு" என கண்டிக்க வேண்டுமென்றும் கூறியதாகத் தெரியவருகிறது.

இன்றுகாலையும் யுதாண்ட் பிரதமர் சாஸ்திரியுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

---

### கம்யூனிஸ்ட் பிரமுகர் தாயகம் திரும்பினர்

உடுப்பிட்டி, ஞாயிறு

கிழக்கு ஜெர்மனி, சோவியத் யூனியன் முதலிய இடங்களுக்கு விஜயம் செய்த நெல்லியடியைச்சேர்ந்த கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு பி. குமாரசாமி தாயகம் திரும்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## தமிழை வளர்த்தவர்

— ஏ. பி. சந்திரநாதன் —

மனிதன் பிறக்கிறான்; இறக்கிறான். உலகம் எல்லோரையுமா நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறது இல்லையே, ஏன்? நினைவில் நிற்போர் தமக்கென வாழாது பிறருக்காக வாழ்ந்தோர். நினைவில் நில்லாதோர். தமக்காக வாழ்ந்து மறைந்தோர். உலகம் அவர்களைப்பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை. ஆனால் பிறருக்காக வாழ்ந்து மறைந்த மேதைகளை மனிதஇனம் மறப்பதே இல்லை. அத்தகைய மேதைகளில் கவி பாரதியும் ஒருவர்.

அஞ்சா நெஞ்சமும் எவ்வித எதிர்ப்பையும் ஏற்கும் உள்ளத்துணிபும் துன்பங்கண்டு புன்னகை பூக்கும் ஆண்மையுணர்வும் ஒருங்கே அமைந்தவர் ஒருவர் தமிழகத்தில் இருந்தார் என்றால் அவர்தான் கவி சுப்பிரமணிய பாரதியார்.

கவி அரசன் கம்பனுக்கு பிறகு அப்பட்டத்தைப் பெற்று பெருமை பெற்றவர் பாரதி ஒருவர்தான். பாரதி தமிழால் சிறப்புப் பெற்றார். தமிழ் இவரால் சிறப்புப் பெற்றது. ஆம் பசித்தவனுக்குக் கிடைத்த உணவு போல, தமிழ் மொழி வளர்ச்சி குன்றிப் போய் அது ஒருசில புலவர்களின் கரங்களில் மட்டும் சிக்கிக் கிடந்த வேளையில்... தமிழ் இலக்கிய உலகைக் கோபுரத்தி லேற்றிவைத்து அனைவரும் வணங்கும் வண்ணம் உயர்வளித்த பெருமை பாரதிக்கே உண்டு.

துன்பமும், துயரமும், சுவை மிக்கனவாக அவரது வாழ்விலே உருண்டுகொண்டிருந்தன. துன்பம் துரத்தும் போதெல்லாம் 'தமிழ்' 'தமிழ்' என்று முழங்கிக் கொண்டிருந்தார். கருத்து வேற்றுமை காரணமாகப் பலர் அவரைத் திட்டுவதையேதொழிலாகக்கொண்டிருந்தனர். சிரமங்களைச் சகித்தலிற் பொறுமைசாலியென அவர் நண்ரான பாரதி தாசன் குறிப்பிடுகிறார்.

கவிஞன் என்போன் உயரிய எண்ணங்களின் தொகுப்பு. அவன் எதுகைமோனைக்கு அடிமையல்லன். யாப்பும் சீரும் அவனைக் கட்டுப்படுத்த முடியாது. குமரிமுனை நம் கண்களுக்கு முக்கோண வடிவில் தோன்றுகிறது. வேறொன்றும் நம் கண்களுக்குப்புலனாகவில்லை. ஆனால் பாரதியின் கண்களுக்கு எவ்வாறு தோன்றுகிறது பாருங்கள்:

''நீலத்திரைகடல்
ஓரத்திலே நின்று
நித்தம் தவம் செய்யுங்
குமரிஎல்லை,'

அங்கே ஒரு குமரி நின்று தவம் செய்கிறாளாம். எப்படிப்புலவரின் உவமை உள்ளம்.

தமிழகம் வளர்ந்து தமிழ்மொழி செழிப்புற்று தமிழன் பெருமை உலகெங்கும் பரவவேண்டுமென்பது பாரதியின்இலட்சியக் கனவு; உயிர் மூச்சு. அதனால் தான் அவர்...

''செந்தமிழ் நாடெனும்
போதினிலே
இன்பத் தேன்வந்து
பாயுது காதினிலே''

என்றும்

''யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழி போல்
இனிதாவதெங்குங்
காணோம்''

என்றும் பாடினார்.

## பொது மேடை

ஜாக்கியைப் பிடிக்க உதவிய பாஸ்கரைப் பாராட்டுகின்றேன். சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்த ஜாக்கியைக்கைது செய்து, கதையைமுடித்த இளைஞர் வாகீசைப்போற்றுகின்றேன்.

—சபா. புஷ்பநாதன்,
சுன்னாகம்.

ஃ

''கொல்லிமலைச்சாரலிலே'' என்ற தொடர்கதை படிக்கப்படிக்க இனித்தது; விறுவிறுப்பாக இருந்தது. வாகீஸுக்கு பாராட்டுதல்கள்.''

— க. இரத்தினகுமார்,
கொக்குவில் மேற்கு.

ஃ

வாகீஸின் கதைமர்மமாக, விறுவிறுப்பாக இருந்தது.

—மு. தெய்வேந்திரன்,
கொக்குவில்.

ஃ

வாகீஸின் சிறந்த கதையை வெளியிட்டதற்கு மாணவர் மலருக்குப் பாராட்டுகள்.

—புஷ்பதேவி,
தேவரானை.

ஃ

கொல்லிமலைச்சாரலிலே பலேஜோர். வாகீஸுக்கு நன்றி.

ஃ

—கந்த. ஞானமுத்தன்,
கைதடி தெற்கு.

ஃ

கொல்லிமலைச்சாரலிலே சுவை குன்றாமல் இருந்தது.

—உ. சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்.

வாகீஸ் எழுதிய ''கொல்லிமலைச்சாரலிலே'' கதையைப் பாராட்டி இடைக்காட்டைச் சேர்ந்த இ. சோ. குகதாசன், ஊரெழு மேற்கைச் சேர்ந்த அ. கனகசூரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆரம்ப பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்கள், இடைக்காட்டைச் சேர்ந்த க. இ. புவனேஸ்வரன், உடுவிலைச் சேர்ந்த பூபதி ஆகியோரும் பாராட்டி எழுதியுள்ளனர்.

### நன்றி கூறுகிறார்

''கொல்லிமலைச்சாரலிலே'' தொடர் கதையைப் படித்து எனக்கு பாராட்டுத் தெரிவித்த அனைவருக்கும் எனது நன்றிகள். எனது கன்னிப்படைப்பான இந்தத் துப்பறியும் தொடர் கதையைப் பிரசுரித்து, எனக்கு ஊக்கமளித்த மாணவர் மலர் ஆசிரியருக்கும், ''ஈழநாட்டு''க்கும் எனது நன்றிகள்.

''வாகீஸ்''
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## பாட்டுக்கொரு புலவன்

மு. சி. ஸ்ரீதயாளன் —



உலகிலே கவிஞர்களைப் போற்றாத நாடு இல்லை. ''நாட்டின் நலம் புலவர் பாட்டில்'' என்றவாறு கவிஞரில்லாதநாடு ஒருபோதும் நலமுடையதாகாது. புலமைத்திறன்படைத்த கவிஞர்கள் தத்தம் கவிவன்மையால் மக்களைக்கொள்ளை கொண்டுவிடுகின்றனர். கவிஞர்கள் அவ்வப்போதுமறைவுற்றபோதிலும்; அவர் படைத்த கவிதைகளோ என்றும் அழியாவரம்பெற்று நிலைத்திருக்கின்றன. ஒரு காலத்திலே புலவர்களுக்குத் தாயகமாக விளங்கியது நம் பாரதநாடு. காலத்திற்கேற்ப பல கவிஞர்களையும் ஈன்றெடுத்து, எண்திசை மருங்கிலும் நற்றமிழின் நறுமணம் பரப்பிவந்த நம் பாரத அன்னை அன்று, இன வேற்றுமையால், மதப்பூசலால் உந்தப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு அல்லலுற்ற காலம் மிகஅண்மைதான். அதுதான் பத்தொன்பதாம் நூற்றாண்டுப்பகுதியின் கடைசிக்காலம். அக்காலத்திலேதான் உலகெங்கும் சுதந்திர விழிப்பு, சமய மறுமலர்ச்சி ஆதியனவும் ஏற்பட்டன. அப்போது பொதுவாகக் கீழைத்தேசங்களிலும் சிறப்பாக இந்தியாவிலும் 'மேலை நாகரீகமோக' மென்கின்ற பெரும்புயல் வீசிக்கொண்டிருந்தது. ஆங்கிலேயரின் மாயவலையிலகப்பட்ட நம்நாட்டவரும் தம் சுய உணர்விழந்து மொழி மறந்து, தேசபக்தியைக் கை நழுவவிட்டு, தமிழன்னையையும் உதாசீனம் செய்யத் தலைப்பட்டனர். தமிழ்த் தாய் அழிவுப் பாதையை நோக்கினாள். கம்பனையும், வள்ளுவனையும், இளங்கோவையும் ஈன்றெடுத்துப்புகழ் சூடிய பாரத அன்னை தன் கதியை எண்ணிக் கண்ணீருகுத்தாள். இத்தகைய ஒரு இழிநிலை நாட்டில் தாண்டவமாடிக்கொண்டிருக்கும்போது, சேற்றிலே முளைத்த செந்தாமரையென, முட்களின் நடுவே மலர்ந்த ரோஜாமலரென பரிதவிக்கும் பாரத மாதாவின் துயர்துடைக்க உவர்க்கடலாழத்திலே தோன்றிய ஒளிமுத்துப்போல இந்திய மண்ணிலே வந்துதித்தான் பாரதி.

எட்டயபுரத்திலே வதிந்து வந்த சின்னச்சாமி ஐயருக்கும், இலக்குமி அம்மையாருக்கும் 1882-ல் அருந்தவப் புதல்வனாக உதித்த பாரதி 'சுப்பையா' என்று பிள்ளைத் திருநாமம் சூடி அன்பாக வளர்க்கப்பட்டு வந்தனர். தமது ஐந்தாம் அகவையில் அன்புத் தாயாரை இழந்த அவர் பள்ளிப்பருவமடைந்தும் பள்ளிசெல்லமறுத்தார் வீட்டிலிருந்தே அனைவற்றையும் கற்றுணர்ந்து பாண்டித்தியம் பெற்றார். ஆங்கிலம், சமஸ்கிருதம், வடமொழி ஆகிய மொழிகளிலும் திறமைபடைத்த அவர், தாய்மொழியாம் தமிழின் விசாலமறிய ஆவலுற்றார். இளமையிலிருந்தே மொழிப்பற்றும் தேசியப்பற்றும் மிக்கவராக விளங்கிய சுப்பையா தமது பதின்மூன்றாம் வயதிலே கவிசமைக்கும் ஆற்றல்பெற்றவராக விளங்கினார் அவரின் புலமைத்திறனைக்கண்ட எட்டயபுரம் சமஸ்தானப்புலவர்கள் அவருக்குப் 'பாரதி' என்று பட்டப்பெயர் சூட்டிக்கௌரவித்தனர். அப்பொழுதிலிருந்தே பாரதி பாரத தேசத்தின் விடுதலைக்காகப் பணிபுரிய முன்வந்தார். தேசியப்பற்றும் மொழியன்பும் உறங்கிக்கிடந்த அவரின் கவிதாசக்தியை ஊக்கி உயிரூட்டின. பாலகனை பாரதி பாடத்தொடங்கினன். பாவலனின் இதயப் புதையலிலிருந்து இனிய கவிதைகள் வெளிவந்தன. 'வெள்ளம் போல் வெள்ளையர் வரினும் என் உள்ளக் குமுறலைக் கக்கியே தீருவேன்!' என்று வீறுநடை போட்டுவந்த தன்தவப் புதல்வனை, ஓலமிட்டழுது கொண்டிருந்த தமிழன்னை ஓடோடியும்சென்று அணைத்துக்கொண்டாள், மூச்சங்கங்களும், முடியுடைமூமன்னர்களும் பேணிவளர்த்த பாராண்ட பழந்தமிழ், ஆங்கிலேயரால் அவமதிக்கப்படுவதைப் பார்த்த பாரதியின் உள்ளம் வெதும்பியது. மானத்தை உயிரிலும் மேலாக மதித்த தமிழினமா இன்று மாற்றானுக்கு அடிமையாக அடிபணிந்து வாழ்கிறது? என்பதை எண்ணிய பாரதியின் உள்ளம் புழுங்கியது, உடல் நடுங்கியது, கண்கள் கனல்கக்கின ஆவேசங்கொண்ட பாரதியின் நாவிலிருந்து புதுப்புதுக் கவிதைகள். பிறந்தன.

தன்நாடு சுதந்திரமிழந்து தத்தளிப்பதை யுணர்ந்த கவிஞர் தன். வீரம் பொருந்திய பாடல்களினால் தூங்கிக்கிடந்த தமிழினத்தைத் துடித்தெழச் செய்தார். புதுமைத் தாகமும் புரட்சி எண்ணமும் கொண்ட தேசியக் கவிஞர் பல ஆயிரமாயிரம் கவிதைகளைப் பாடினார். 'சுதந்திரம்! சுதந்திரம்!' என்று குமுறினான் பாரதி. பாரதியின் குரல் கேட்டு விழித்துக்கொண்டது பாரத சமுதாயம்.

பாரதியார் ஒரு புரட்சிக் கவிஞர். இல்லையில்லை! அவர் கவியுகத்தின் புதுக் கவிஞர். பாரதி பாடாத பொருள் இப்பாரிலேயே கிடையாது. அவரது பாடல்களைப் பாரா

(2-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

ட்டாத பண்டிதரோ, பாமரரோ இப்பாரினிலில்லை எனலாம். எனவேதான் 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!' என்று அவன் புகழ் பாடி நிற்கிறார் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள்.

பாரத நாட்டின் வரலாற்றிலே 1921 செப்டம்பர் பதினேழாம்நாள் ஒருமறக்க முடியாத சோகதினம், அதுதான் பாரதத்தின் பாவலனாம் பாரதி தமிழுலகைத் தவிக்கவிட்டு மறைந்தநாள். காலன் ஒரு தேசபக்தனைக் கவர்ந்துசென்றுவிட்டான். தமிழ் வாழும் வரையும் பாரதியும்வாழ்வார். வாழ்க தமிழ்நாடு வாழ்க பாரதியின் நாமம்...

## பழமொழிப் பித்தனின் ஐந்து கேள்விகள்

கடந்த வாரம் ''பழமொழிப்பித்தன்'' கேட்ட கேள்விகளுக்கு ஏராளமானவர்கள் விடைகள் எழுதியிருந்த போதிலும் பலரின் பழமொழிகள் பொருத்தமற்றவையாகவே இருந்தன. எமக்கு வந்து குவிந்த தபாலட்டைகளைத் தெரிந்தெடுத்து அதிகமானவர்களின் விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில்கூட மிகவும் குறைந்த தொகையினரே சரியாக எழுதியிருந்தனர். சரி, இனி உரியபழமொழிகளைக் கவனிப்போம்.

(1) ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். (2) கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? (3) ஐயர் வரும்வரை அமாவாசைகாத்திருக்குமா? (4) உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போல. (5) ஆடத்தெரியாதவள் அரங்கு பிழை என்றாளாம்.

பின்வருபவர்கள் அநேகமாகச் சரியாக எழுதியிருந்தனர். இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்:

கு. அன்னம்மா, நாயன்மார்கட்டு; பெ. நடராசா, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்; சீ. வைஜயந்திமாலா, யாழ்ப்பாணம்; மு. மகாலிங்கம், சுழிபுரம்; ஐயன்னா. முருகையா, சுன்னாகம்; சபா. புஷ்பநாதன், சுன்னாகம்; லூ. அ. இராசநாயகம், மிருசுவில்; வி. நாகமணி, பண்ணை வீதி, யாழ்ப்பாணம்; ''சக்திவாசம்'', கரவெட்டி; ச. அ. சபாரத்தினம், சிறுப்பிட்டி மேற்கு; திருவருள்செல்வி ஆறுமுகம், பருத்தித்துறை; க. குகனேஸ்வரி, வட்டுக்கோட்டை; க. பொ. த. மாணவிகள், முருகமூர்த்தி வித்தியாசாலை, அராலி; க. தனேஸ்வரி, அராலி மேற்கு; சோ. இராஜகுலராஜசிங்கம், கல்வியங்காடு; சி. சுதந்திரராஜா, தாவடி; தா. தியாகராசா, கரணவாய் மேற்கு; ந. இரத்தினமலர், கொக்குவில்.

## (சே)காப்பி

-சி. சண்முகலிங்கம்-

உலகம் முழுவதும் (சே)காப்பி ஒரு பானமாக உபயோகிக்கப்படுகிறது. (சே)காப்பி இல்லாமல் சிலருக்கு வேலையே ஓடாது. மாணவருக்கு கல்வி படிக்க முடியாது. இப்படியாக எம்முடன் இரண்டறக் கலந்து எம் வாழ்க்கையில் இணைபிரியாத நண்பனாகிவிட்ட (சே)காப்பியைப் பற்றி சிறிது அறிந்து கொள்வது அவசியமாகும்.

(சே)காப்பி ஓர் உணவல்ல. அது ஒருவித நஞ்சு கலக்கப்பட்ட ஒரு மருந்து என்றுதான் கூறவேண்டும். (சே)காப்பியைப் போலவே தேயிலை, கொக்கோ முதலிய பானங்களும் தீமை விளைவிப்பவை. (சே)காப்பிப் பானம் அருந்துவதால் தலைவலி, பெலவீனம், நரம்புத் தளர்ச்சி முதலிய வியாதிகள் ஏற்படும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்து விட்டனர். உற்சாகம் ஊட்ட சிறந்தபானம் (சே)காப்பி [illegible] களில் ஒன்று (சே)காப்பி என்று இகழ்ச்சியாக மாறி விட்டது. விஞ்ஞானம் கூட இது விஷபானம் என நிரூபித்து விட்டது. (சே)காப்பி குடிப்பதனால் இரத்த கொதிப்பு நோய் உண்டாகும். என அநேக வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாக இருதயம் பெலவீனமடைந்து விடுமென கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

சேர். வில்லியம் றொபர்ட்ஸ் என்னும் நிபுணர் செய்த ஆராய்ச்சிகளின் பயனாக உணவை ஜீரணிக்க உதவும் உமிழ்நீரின் (எச்சில்) தன்மைகளை குறைத்து விடும் சக்தி (சே)காப்பிக்கு உண்டு என்பதைக் கண்டு பிடித்துவிட்டார். டொக்டர் டிப்பின்ஸ் என்ற ஆங்கில உணவு வைத்தியர், ஈரலைப் பாதிக்கும் குணம் (சே)காப்பியிடம் உண்டு என்பதையும், இருதய துடிப்பில் வித்தியாசம் ஏற்படுத்தவும் (சே)காப்பியால் முடியும் எனவும் கண்டுபிடித்து இருக்கிறார்.

(சே)காப்பி மயக்கந் தரும் மதுக்களிலும் பார்க்க அதிக தீமைகளை விளைவிக்கும். மது அருந்தும் ஒருவன் அதை அருந்தாமல் இருக்க முடியாததைப் போலவே (சே)காப்பியெனும் ''மதுவை'' அருந்தியவனுக்கு அதை விட்டுப் பிரிய மனமில்லாமல் அதற்குத் தனது சக்தியை அடிமையாக்குகிறான். நல்ல சத்துள்ள பழவகைகள், பாலவகைகள் பலவிருக்க அவற்றை உபயோகியாது (சே)காப்பி எனும் மதுவை அருந்தி நாம் எம் சக்தியை வீணாக்குதல் மடமையல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### தேவை

நீர்வேலியில் ராஜவீதியில் உள்ள 25 பரப்புக் காணியின் பேரால் ரூ. 5000/- கடன்தேவை. விரும்புவோர் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 855, 'ஈழநாடு' மேற்பார்த்து.

855

### '20-ந் திகதிக்கு முன் சம்பளம் வழங்குக'

பம்பலப்பிட்டி, திங்.

மகாசிவராத்திரியை அரசாங்க விடுமுறையாக்குமாறும், வெள்ளிக்கிழமைகளில் இந்துக்கள் தங்கள் சமய அனுட்டானத்தைக் கைக்கொள்ள காலையில் 2 மணி நேரலீவு வழங்குமாறும் அரசாங்கத்தைக் கோரும் தீர்மானங்கள் தமிழ் அரசாங்க சேவையாளர் காங்கிரஸின் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டனதீபாவளியைமுன்னிட்டுஅரசாங்க கூட்டு ஸ்தாபனஊழியர்களின் அக்டோபர்மாத சம்பளத்தை அம்மாதம்20-ந்திகதிக்குமுன்னர் கொடுக்கவேண்டுமெனக் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

### நாய்களின் தொல்லை

சுழிபுரம், திங்கள்

இப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை தாங்கமுடியாமல் மக்கள் அதிகம் கஷ்டத்துள்ளாகியுள்ளனர். நேற்று இரவு சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட நாய்கள் சித்தங்கேணி சந்திக்கு அருகாமையிலுள்ள தெருவில் நடந்து சென்றவர்களைச் சுற்றிவளைத்து பெரும் கஷ்டத்தை உண்டுபண்ணின. இருவருக்குநாய்கள் கடித்து காயம் விளைவித்தன.

REGAL--JAFFNA
NOW SHOWING!
Norman wisdom
IN
GIRL ON THE BOAT

## விளையாட்டுப் பகுதி

### அரியாலைக்கு மீண்டும் முதலிடம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். பொதுவிளையாட்டுச் சங்கத்தின் 17-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் திரு. ஐ. பி. துரைரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 95 புள்ளிகளும், கோலிஸ்ராஸ் 20 புள்ளிகளும், ஜே. ரி. எப். ஸி. கழகம் 37 புள்ளிகளும், இளைஞர் விளையாட்டுக்கழகம் 65 புள்ளிகளும் பெற்று அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மீண்டும் வெற்றிஈட்டியது.

வெற்றிபெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் திருமதி துரைரத்தினம் பரிசில்களை வழங்கினர்.

ஃ ஃ ஃ

### டேபிள் டெனிஸ்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்ட பொது சேவை விளையாட்டுக் கழகம் நடத்திவரும் டேபிள் டெனிஸ் சுற்றுப் போட்டியில் கடந்தவருடம் மூன்று போட்டிகளிலும் வெற்றி வீரராகக் கணிக்கப்பட்ட திரு. பி. பரராசசிங்கம் அண்மையில் நடைபெற்ற இவ்வருடப் போட்டியிலும் மூன்று போட்டிகளிலும் திறமையுடன் வெற்றியீட்டினர். அவருடன் போட்டியிட்ட வீரர் செபரத்தினம் விட்டுக்கொடுக்காமல் போட்டியிட்டார். இளைஞர்களுக்கான போட்டி மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது, ஒற்றைஆட்டத்தில்மகிழ்ராஜன் குகனுனந்தனை தோற்கடித்தார்.

இரட்டையாட்டத்தில்குகனுனந்தன் லோறன்ஸ் வீரர்கள் மகிழ்ராஜனையும் வீரசிங்கத்தையும் தோற்கடித்தனர். இவர்களுக்கிடையேயான கடுமையான போட்டியை ரசிகர்கள் வெகுவாக ரசித்தனர்.

பெண்களுக்கான ஒற்றைப் போட்டியில்கந்தையா சகோதரிகளின் விளையாட்டு மிகவும் கவர்ச்சிகரமானதாகக் காணப்பட்டது. கடைசியாட்டத்தில் சரஸ்வதிஅமிர்தலிங்கம் அவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். மேற்படி இறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராகவும் தலைவராகவும் மல்லாகம் நீதிபதி திரு. அத்துறுப்பான கலந்து கொண்டார். திருமதி. அத்துறுப்பான பரிசில்களை வழங்கினர்,

### லாபம்

பம்பலப்பிட்டி, திங்கள்

பரந்தன் ரசாயன கூட்டு ஸ்தாபனத்தில் இவ்வாண்டின் முதல் ஐந்து மாதங்களுக்குள்ளும் 60 லட்சம் ரூபா லாபம் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

### கல்வி

பீ. ஏ., ஜி. ஏ. கியு, பண்டித, ஜி. சி. ஈ. உயர், சாதாரணம் கலை, விஞ்ஞானம், வர்த்தகம், தமிழ், ஆங்கிலம், சிங்களம், தபால் தந்தியாளர் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 965

ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தி பெறவேண்டுமானல் எங்கள் காலை / மாலை வகுப்புகளில் சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர். 998

### விற்பனைக்கு

EY. A40 சோமசெட்- உள்வேலை, வெளிவேலை, புதுரயர், பற்றறி, றீவயரிங், றீபோர் செய்யப்பட்டது. 119 A, மெயின்வீதி யாழ்ப்பாணம். 1029

### விற்பனைக்கு

நயினுதீவு நாகபூஷணி அம்மன் கோவில் வடக்கு வீதியில் 6—7 பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. விரும்புவோர் கீழ்க்காணும் விலாஸதாரருடன் தொடர்புகொள்ளவும்:- குணரத்தினம் கந்தையா, 10, வைமன் ரோட், யாழ்ப்பாணம். 1012

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## லாகூரில் இரண்டாம்.........

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### விசாகபட்டினம் மீது பாக். விமானம்

கடந்த சனி, ஞாயிறு நாட்களில் பாகிஸ்தான் யுத்தவிமானங்கள் விசாகபட்டினம் மீது பறந்தனவென்று இந்தியா அறிவித்துள்ளது. அடையாளம் காணப்படாத சில விமானங்கள் விசாகபட்டினம் மீது முதலில் பறந்துசென்றபொழுது இந்திய விமானப்படை விமானங்கள் துரத்திச்சென்றன என்றும், அவை விரைவாகச் சென்று மறைந்துவிட்டன என்றும் செய்திகள் கூறுகின்றன.

### "இந்திய படைகள் விரட்டப்பட்டன"

மேற்குப் பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் இந்திய—பாகிஸ்தான் துருப்புகளுக்கிடையே கடுமையான சண்டை நடைபெற்றுவருகின்றதென்றும் எல்லைகளிலிருந்து இந்தியப் படைகள் விரட்டப்பட்டுவருகிறார்களென்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது. சியால் கோட்டில் பாகிஸ்தான் விமானங்கள் நேற்று விமானத் தாக்குதல்கள் நடத்தி பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கின்றன, இந்தச் சண்டையில் 45 இந்திய டாங்கிகள் அழிக்கப்பட்டன என்றும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கப்பல்களுக்கு தடை உத்தரவு

சிட்டகாங் துறைமுகத்துக்கு இரவு வேளைகளில் கப்பல்கள் வருவது இப்பொழுது தடை செய்யப்பட்டிருக்கிறது. பகலில்மட்டுமே இத்துறைமுகத்துக்குக் கப்பல்கள் வரவேண்டும் என்று பாகிஸ்தான் புதிதாக உத்தரவிட்டுள்ளது.

### கராச்சியில் தூதர்கள் உறுதி மொழி

கராச்சியில் நேற்று சீன, சவூதி அரேபியா, துருக்கி, இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் தூதர்கள் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரியைச் சந்தித்து பாகிஸ்தானுக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்தனர். பாகிஸ்தானுக்குச் சகல உதவிகளும் அளிக்க தங்களது நாடுகள் தயாராக இருக்கிறதென்று இத்தூதர்கள் உறுதியளித்தனர்.

### மேற்கு வங்காளத்தில் புதிய நெருக்கடி

மேற்கு வங்காளத்தில் பாகிஸ்தான் துருப்புகள் புதிய பகுதிகளில் தாக்குதல்கள் ஆரம்பித்துள்ளன. நேற்று பாகிஸ்தான் துருப்புகள் இப்பகுதிகளில் தீவிரமாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தின.

### அஸாத் காஷ்மீரில் இராணுவச் சட்டம்

பாகிஸ்தான் வசமுள்ள அஸாத் காஷ்மீரில் நேற்று இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. பத்திரிகை ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வேறு பலரும் கைதாக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

### இராணுவ வழக்கு ஒத்திவைப்பு

சாவகச்சேரி. திங்கள்

கடந்த 5-7-64 அன்று தாளையடியில் நடைபெற்ற இராணுவத் தாக்குதல் சம்பந்தமாக இயக்கச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் மீது குற்றம்சாட்டி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இரு வழக்குகளும் மாவட்ட நீதிபதியின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டு மாவட்ட நீதிமன்றத்திற்குத் தாக்குதல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணை செய்தபின்னரே இந்த வழக்குகள் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று கூறி மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல்காதர் இருவழக்குகளையும் காலவரையின்றி ஒத்திவைத்தார்.

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்)

மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2, 6, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்
கைகொடுத்த தெய்வம்

இரவில் இன்னல் நேராமல்
பாதுகாத்துக் கொள்ளுங்கள்

பிரகாசம் மிக்கதும் நீடித்தகாலம் பாவிக்கக் கூடியதுமான லக்சபான டார்ச் பாட்டரிகளையே உங்கள் டார்ச்சில் பொருத்தி பாவியுங்கள்

இறக்குமதி செய்யப்படும் ஏனைய ரக டார்ச் பாட்டரிகளைப் பார்க்கிலும் லக்சபான டார்ச் பாட்டரிகள் சிறந்த முறையில் பாவனைக்கு உகந்தவை. ஏனெனில் இவை உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றதாகத் தயாரிக்கப்படுகின்றன, மேலும் தயாரித்த புதிதிலேயே உங்களுக்கு கிடைக்கின்றன

இன்று கிடைக்கக் கூடிய சிறந்த டார்ச் பாட்டரி

லக்சபான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாகூர், சியால்கோட்டில் கடும் சண்டை
## யுதாண்ட்-சாஸ்திரி பேச்சுவார்த்தை

லண்டன், செப். 12

ஐக்கியநாடுகளின் பொதுக்காரியதரிசி யுதாண்ட் இன்று பிற்பகல் பிரதமர் திரு. சாஸ்திரியுடன் இரண்டுமணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தைகளில் வேறு எவரும் கலந்துகொள்ளவில்லை.

இதற்கிடையில் லாகூர் முனையிலும், சியால்கோட் எல்லையிலும் இந்திய—பாகிஸ்தான் துருப்புக்களிடையே கடும் சமர் நடைபெறுகிறது. லாகூரில் தாம் முன்னேறி வருவதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. சியால்எல்லையில் தமது படைகள் கடும்தாக்குதல் நடத்துவதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. லாகூர், சியால் ஆகிய இடங்களில் எதிரிக்கு கடும்சேதம் விளைவித்ததாக இரு பகுதியினரும் கூறிக்கொள்கிறார்கள். எனினும் இவ்விடங்களில் கடும்சண்டை நடைபெறுவது உண்மையாகும்.

பாகிஸ்தான்வசமுள்ள காஷ்மீரில் இராணுவச்சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளதாகவும், அங்கு ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சட்டவிரோதநடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டி சிறைபிடிக்கப்பட்டுள்ளதாதவும் இந்தியவானொலி அறிவித்தது. இரு நாடுகளிலும் உள்ள தூதரகங்களை மூடவேண்டுமென இந்தியாகோரியுள்ளதாக பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

புதுடில்லி, செப். 12

இன்று மாலை 7 மணியளவில் அமிர்தசரஸில் 6 பாகிஸ்தானிய ஜெட் விமானங்கள் பறந்து குண்டுவீசின. அவற்றில் 'பி 57' என்ற ஒரு விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது. இன்று காலை பல விமானங்கள் அமிர்தசரஸ் மீது பறந்தனவாயினும்அவை துரத்தப்பட்டன.

லாகூர் பகுதியில் இந்தியப் படைகள் இன்று 40 பாகிஸ்தானிய தாங்கிகளை அழித்ததாகவும் கடந்த இரண்டு நாளில் 52 தாங்கிகள் அழிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது,

## தாயும் சேய்களும் நஞ்சுண்டு பரிதாப மரணம்

காங்கேசன்துறை, ஞாயிறு

தையிட்டியைச் சேர்ந்த ஒரு பெண்ணும், அவருடைய மூன்று குழந்தைகளும் நஞ்சு அருந்தியதனல் மரணத்துக்குள்ளான பரிதாபகரமான சம்பவம் இன்று நடைபெற்றது.

திருமதி நேசம்மா செல்லத்துரை என்ற இப் பெண் தனது மூன்று குழந்தைகளுக்கும் நச்சுத்திராவத்தைக் கொடுத்துத் தானும் அத் திராவகத்தை அருந்திக்கொண்டு தற்கொலைசெய்ததாக இது பற்றிக் கூறப்படுகிறது.

திருமதி நேசம்மா முன்னரும் இரண்டு தடவைகள் தற்கொலைசெய்ய முயற்சி செய்திருக்கிறரென்றும் சொல்லப்படுகிறது.

சிறீ என்ற ஆறு வயதுச் சிறுவனும், செல்வம்என்ற நான்கு வயதுச் சிறுவனும் சகாயராணி என்ற எட்டு மாதக் குழந்தையுமே நச்சுத்திராவகத்துக்குப் பலியானவர்களாவர்.

திருமதி நேசம்மா, நீதி பதிக்கும் தமது சகோதரருக்கும் எழுதிய இரண்டு கடிதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவம் சம்பந்தமாக காங்கேசன்துறை பொலிஸ்தலைமை அதிகாரி போவி விசாரணை செய்துகிருகிறர்.

நான்கு பிரேதங்களும் ஒன்றன்பின் ஒன்ருக வைக்கப்பட்டிருப்பது பார்ப்பவர்களுக்கு வேதனையை அளிக்கக்கூடிய விதத்தில் இருக்கிறதென நேரில் பார்த்த நமது நிருபர் தெரிவித்தார்.

மரணவிசாரணை நடைபெறுகிறது.

## 'பெற்ருேரின் அக்கறை அவசியம்'

யாழ்ப்பாணம், திங்கள்

அண்மைக்காலத்தில் இலங்கையின் கல்வி முறைகளில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆரம்ப நாள் தொடக்கம் இன்றுவரை பாரம்பரியத்தையும், தரத்தையும் உயர்த்திவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்ருேர்தின விழாவில் பேசும் போது திரு.ஏ. எம். ஏ. அஸிஸ் மேற்கண்டவாறு கூறினர்.

வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அஸீஸ் மேலும் கூறியதாவது;-

பாடசாலைகள் அரசாங்கப் பொறுப்பில் நடைபெற்றபோதிலும் பெற்ருேர் ஆதரவுடன் இயங்கவேண்டும். அமெரிக்காவில் பெற்ருேர்கள் கல்வி விஷயத்தில் அதிக அக்கறை எடுத்துவருகிருர்கள். இதனல் கல்லூரிகள் முன்னேற்றமடைந்துள்ளன.

திரு. தணிகாசலம் பேசும்போது, இக்கல்லூரி நாடெங்குமிருக்கும் இந்துக்களுக்கும் உரியதென்றும், ஆசிரியர்களை நியமிக்கும் போது பழைய மாணவர்கள் என்ற நியதி இருக்கக்கூடாதென்றும், எங்கும் பழைய மாணவர்கள் இருக்கிருர்களென்றும் கூறினர்.

## வானொலி நிலையம் வேண்டும்

மீசாலை, ஞாயிறு

''நாற்பது மாடுகள் கொண்ட பண்ணையில் இசை அமைக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டபோது பரந்தனில் பால் சுரப்பது இரு மடங்கானதைக் கண்டுபிடித்திருக்கிருேம். இசையின் ஈர்ப்பினல் தாவரங்களும் செளித்தோங்குவதைப் பரிசோதனைகள்மூலம் நிரூபித்துவிட்டார்கள். யுத்த பீதி அருண்ட இவ்வேளையில் உரத்திற்குப் பதில் இசையையும் உபயோகிக்குமாறு விவசாயப் பெருமக்களை வேண்டுகின்றேன்.''

தமிழ் மக்களை ஊக்குவிக்கவும் கலாச்சார தமிழ் நிகழ்ச்சிகளுக்கு இடமளிக்கவும் உடனடியாக யாழ்ப்பாணத்தில் ஓர் உப வானொலி நிலையம் ஏற்படுத்தவேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி இசைக் கலைமன்றத்தின் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளுக்குத்தலைமைதாங்கிஉரையாற்றுகையில் மன்றத் தலைவரும்பரந்தன் தபால்நிலைய உயர்தர அதிகாரியான திரு. க.இராமச்சந்திரன்கூறினர்,




## கொழும்பு
செவ்வாய் 14-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நிலையஒலிப் பதிவுகள், 7-00 வயலின், 7-30 மத்தாப்பு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, மாலை 6-05 இரவு 7-15)

319.1 மீ (940 கி. ஸை.)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப் படஇசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 டி. பி. சிவன் — பாட்டு, 2-40 பொன்னொளிர் பாரதம்.

மாலை 5-00 ... 5-30 துதிப்பாடல்கள்.

## துணிகள் வாங்க புதிய 'கார்ட்'

பம்பலப்பிட்டி, திங்.

பங்கீட்டு அரிசிப் புத்தகங்கள் இல்லாதவர்களுக்கு உணவு அதிகாரி துணிகள் வாங்குவதற்கான அனுமதி அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த அனுமதி அட்டைகளை காரியாதிகாரியின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாமென உணவு அதிகாரி அறிவித்துள்ளார்.

## கணக்கு பதிவாளர் வகுப்புகள்

சுழிபுரம், திங்கள்

வடமகாணத்தில் கூட்டுறவு ஆணையாளரால் தெரிவு செய்யப்பட்ட கணக்கு பதிவாளர்களுக்கான பயிற்சி வகுப்பு சங்கானை பலநோக்குக்கூட்டுறவுச் சமாஜ கட்டிடத்தில் நடைபெற்றுவருகிறது. வவனியா மற்றும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இருபத்தைந்துக்கு மேற்பட்டோர் பயிற்சி பெறுகின்றனர். ஓய்வுபெற்ற கூட்டுறவு உத்தியோகத்தர்கள் வகுப்பை நடாத்தி வருகின்றனர்.

## இசை விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

சாவகச்சேரியில் நடைபெறும் தென்மராட்சி இசைக்கலை மன்றத்தின் பத்தாவது ஆண்டு இசை விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

மாலை 6-30 — 7-15 திருமதி மகேஸ்வரி நகுலேஸ்வரன் — வயலின், திரு. ஏ. எஸ். இராமநாதன் — மிருதங்கம், 7-15 — 8-15 திருமதி மோகனம்பிகை கணேசன் — பாட்டு, திரு. எஸ். வைத்தீஸ்வர ஐயர் — வயலின், திரு. வி. மணி ஐயர் — மிருதங்கம், 8-15 — 9-30 டாக்டர் எஸ். மகேஸ்வரன் — பாட்டு, திரு. எஸ். பரராஜசிங்கம் — பாட்டு, திரு. ஜி. சண்முகானந்தம் — வயலின், திரு. ஏ. எஸ். இராமநாதன் — மிருதங்கம், 9-30 — 9-45 தலைமையுரை — நீதியரசர் உயர் திரு. எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. 9-45 — 11-00 திரு. என். சண்முகரத்தினம் — பாட்டு, திரு. எஸ். சர்வேஸ்வர சர்மா — வயலின், திரு. ஏ, எஸ். இராமநாதன் — மிருதங்கம், 11-00 — 12-30 திரு. பீ. பழனிமலை கோஷ்டியினர் — நாதஸ்வரம்.

இரவு 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 வாத்தியக் கோஷ்டிஇசை, 6-35 ஊர்ச் சாவடி, 6-40 பொது நோக்கு, 6-45 கைகேயி நல்லவளா? — நாடகம், 7-00 நாட்டுப்பாடல்கள், 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 சர்வகலாசாலைகளுக்கு, 8-30 இசைக்கதம்பம், 9-15 பாட்டு.

## வானொலி தமிழ்க் கலைமன்றம்
### மீண்டும் ஆரம்பிக்க முயற்சி

பம்பலப்பிட்டி, திங்கள்

1948ம் ஆண்டு தொடக்கம் ஏறக்குறைய 7 ஆண்டுகளாக இசைக்கலைஞர்களுக்குப் பெரும் தொண்டாற்றி அண்மைக்காலத்தில் இயங்காதிருக்கும் இலங்கை வானொலி-தமிழ்க்கலை மன்றத்தை மீண்டும் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்வதாக அறியப்படுகிறது. பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்கு முன் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள கலைஞர்களின் அபிப்பிராயங்களை நேரிலும், எழுத்து மூலமும் அறிவதற்கான முயற்சிகளை மன்றச் செயலாளர் திரு. நா. ப. பாலச்சந்திரன் மேற்கொண்டுள்ளார்.

## நாட்டிலும் நகரிலும்

2-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்து சமய ஒருமையை விளக்கிய தாயுமானஸ்வாமிகள்மீது மிகவும் ஈடுபாடுள்ளவர்கள். சேர் அருணுசலத்தின் 'சமயதத்துவ ஆராய்ச்சிகளும் மொழிபெயர்ப்புகளும்' என்ற நூலுக்கு முன்னுரை எழுதிய சேர் சி. பி. 'தமிழ் முனிவர்களினதும், நாயன்மார்களினதும் சிந்தனைச் செல்வத்தையும், பொருட் புதையலையும் வெளிக்கொணர்ந்த சேர் பொன் அருணுசலத்திற்கு இவ்வுலகமே கடமைப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

ஆங்கிலம், ஆரியம், தமிழ், லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் ஒருங்கே பாண்டித்தியம் பெற்று விளங்கிய சேர் அருணுசலத்துக்கு ஈடாக எந்த இலங்கைத் தமிழனையும் சுட்டிக்காட்ட முடியாது.

சேர் பொன்னம்பலம்அருணுசலத்தைப்பற்றி இவ்வளவும் எழுதிவிட்டு சாம்ராஜ்ய கலைவிழாவுக்கு லண்டன் செல்லும் இலங்கைக் கோஷ்டியில் ஒரு தமிழனவது இல்லையே என்று நினைக்கிறபோது நெஞ்சம் உருகுகிறது. லண்டன் செல்வதற்குத் தகுதியான ஒரு புலவனே, சங்கீதக்காரனே, நாடகாசிரியனே அரசாங்கத்தின் கண்ணில் தட்டுப்படவில்லையா? அல்லது சிங்கள நாகரீகத்தைவிட வேறு நாகரீகங்கள் இலங்கையில் கிடையாதா?

—''வழிப்போக்கன்''

## நன்றி நவிலல்

23-8-65-ல் நடைபெற்ற எங்கள் மகளின் திருமண வைபவத்திற்கு வருகைதந்தும், ஆசிகூறியும், அன்பளிப்புகள் அளித்தும் எம்மை மகிழ்வித்த உறவினர் அன்பர்களெல்லோருக்கும் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருேம். K. R. சுப்பிரமணியம் தம்பதிகள் 'கீச்சியன்காடு' வல்வெட்டி, வல்வெட்டித்துறை. 1026


# A Public Reception

will be accorded to

**Mrs. Dona Luise Ananda Coomaraswamy**

on Tuesday, the 14th inst., at 5-30 p. m.

at the

**Town Hall, Jaffna**

T. Muttusamipillai Esq

will preside

All are cordially invited

Vaidyeshwara Vidyalaya, Jaffna 11-9-65

S. Ambikaipakan
K. C. Shanmugaretnam
for organising committee


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org